

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (31.12.2025) முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி, தலைமைச் செயலாளர் ந.முருகானந்தம். சந்தித்து வாழ்த்துப் பெற்றார்,



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (31.12.2025) முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி காவல்துறை தலைமை இயக்குநர் க. வெங்கடராமன், சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (31.12.2025) முகாம் அலுவலகத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ராஜராஜன் மாணிக்கம் தனது குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் துறை அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி. ராஜா உள்ளார்.

### தமிழ்நாட்டில் 2026 தேர்தலில்

# தி.மு.க.வுக்கு எந்த ஒரு வலுவான போட்டியாளரும் இல்லை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ ஆங்கில நாளேட்டிற்கு பேட்டி!

**சென்னை,ஜன.2-**

**தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ ஆங்கில நாளேட்டுக்கு அளித்துள்ள நேர்காணல் வருமாறு:-**

முத்தமிழறிஞர் கலைஞரின் தனித்துவமான பலமே, அவரது அசைக்க முடியாத போராட்டக் குணம்தான் என்றும், பல சோதனையான காலகட்டத்திலும், முத்தமிழறிஞர் கலைஞர் தனது கொள்கையில் இருந்து மாறாதவர் என்றும் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் குறிப்பிடத் தக்க குணம் அவரது கடின உழைப்பு தான் எனக் குறிப்பிட்ட உதயநிதி ஸ்டாலின், ஒவ்வொரு நாளும், மாநிலத்தின் முதலமைச்சராகவும், தி.மு.க.வின் தலைவராகவும் நூறு சதவீத உழைப்பை வழங்குகிறார் என பெருமிதம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தனது கூட்டணிக் கட்சிகளின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதாகவும், கொள்கையால் பிணைக்கப்பட்டுள்ளதாகவும் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

அ.தி.மு.க. பலவீனமாக இருந்தாலும், அதுவே எதிர்க்கட்சி என்றும், 2026 தேர்தலில் பா.ஜ.க. மற்றும் அதன் “பி” டீம்களையும் எதிர்கொள்வோம் எனத் தெரிவித்துள்ள துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாட்டில் 2026 தேர்தலில் தி.மு.க.வுக்கு எந்த ஒரு வலுவான போட்டியாளரும் இல்லை என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டிற்கு பேட்டியளித்துள்ளார்.

# வர்த்தக சிலிண்டர் விலை ரூ.110 உயர்ந்து, ரூ.1,849.50ஆக நிர்ணயம்!

## புத்தாண்டின் முதல் நாளிலேயே அதிர்ச்சி அளித்த எண்ணெய் நிறுவனங்கள்!

புதுடெல்லி, ஜன.2–

வர்த்தக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 110 ரூபாய் உயர்ந்து, ஆயிரத்து 849 ரூபாய் 50 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலையின் அடிப்படையில், சமையல் எரிவாயு சிலிண்டர் விலையைஎண்ணெய் நிறுவனங்கள் மாதம்தோறும் நிர்ணயம் செய்கின்றன. அதன்படி, 2026ஆம் ஆண்டின் முதல் நாளான நேற்று வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 110 ரூபாய் அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை ரூபாய் 110 உயர்ந்து, ஆயிரத்து 849 ரூபாய் 50 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதே வேளையில், 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சமையல் எரிவாயு விலையில் எவ்வித மாற்றமும் இன்றி 868 ரூபாய், 50 காசுகளுக்கு விற்பனையாகிறது.

### தேனி அருகே பி.சி.பட்டியில் – பேரூராட்சித் தலைவர் மிதுன் சக்கரவர்த்தி ஏற்பாட்டில்

# மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த 1000 பேர் தி.மு.க.வில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. முன்னிலையில்!

தேனி,ஜன.2-

பி.சி.பட்டியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு, தேனி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி முன்னிலை வகித்தார்.

தேனி வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் சக்கரவர்த்தி வரவேற்று பேசினார். பேரூர் தி.மு.க. செயலாளர் செல்வராஜ் நன்றி கூறினார்.

விழாவில், பேரூராட்சி சேர்மன் வக்கீல் மிதுன் சக்கரவர்த்தி ஏற்பாட்டில், வடக்கு மாவட்ட செயலாளர்.தங்கதமிழ்செல்வன் எம்.பி. முன்னிலையில், பி.சி.பட்டியைச் சேர்ந்த அ.தி.மு.க., அ.ம.மு.க., த.வெ.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி ஆயிரம் பேர் தி.மு.கவில் இணைந்தனர்.

வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. பேசுகையில், இன்றைக்கு சேர்ந்துள்ள ஆயிரம்பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியலை, பேரூராட்சி சேர்மன் இதற்கு முன் இருந்த கட்சிப்பெயர்களோடு வழங்கியிருக்கிறார். தமிழ்நாடு முதல்வர் இந்தியாவிலேயே சிறந்த முதல்வராக செயல்பட்டு வருகிறார். தமிழ்நாட்டு மக்களுக்கு ஏராளமான திட்டங்களை வழங்கி சிறந்த ஆட்சியை தமிழ்நாட்டுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார் என்றார்.

இதில் பெரியகுளம் எம்எல்ஏ சரவணக்குமார், தீர்மானக்குழு இணை செயலாளர் ஜெயக்குமார், உயர்நீதிமன்ற வக்கீல் நிஷாந்த், நகர செயலாளர்கள் தேனி தெற்கு நாராயணபாண்டியன், பெரியகுளம் முகமது இலியாஸ், போடி புருஷோத்தமன், ஒன்றிய செயலாளர்கள் தேனி வடக்கு சக்கரவர்த்தி, பெரியகுளம் வடக்கு வக்கீல் பாண்டியன், சின்னமனூர் மேற்கு முருகேசன், பேரூராட்சி சேர்மன்கள் பூதிப்புரம் கவியரசு, மார்க்கையன் கோட்டை ஓ.ஏ.முருகன், மாவட்ட துணை செயலாளர்கள் செந்தில் முருகன், திருக்கண்ணன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் டாக்டர். வி.ஆர்.ராஜன், பொதுக்குழு உறுப்பினர் ராஜா ரமேஷ், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆசைத்தம்பி, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானிமுத்துராஜ், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சுரேஷ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்

பாளர் வக்கீல் ராஜசேகர், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ராஜேஷ், மீனாட்சிபுரம் பேரூர் செயலாளர் செல்வராஜ், பிசிபட்டி பேரூர் அவைத்தலைவர் ஜோதிராம், பேரூராட்சி கவுன்சிலர்கள் பாண்டீஸ்வரன், சந்திரா, சுகன்யா, மகாராஜன், கணேஷ்பாபு, போடி ஒன்றிய துணை செயலாளர் தமிழ்வாணன் அரசு போக் குவரத்துக் கழக தொழிற் சங்க முருகன், வீரமுத்து உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

